BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL (BIRJT )

An international open access, peer- reviewed, refereed journal

# கி. ராஜநாராயணன் சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்

**பா. மோகனா**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

ஸ்ரீ முத்துக்குமரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

சிக்கராயபுரம், சென்னை-600069

அலைபேசி எண்:6369720082

**ஆய்வுச் சுருக்கம்**

கி.ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு தேர்ந்த கதை சொல்லி. கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. கரிசல் நிலத்தை தன் இலக்கியத்தில் எழுதியவர். "நான் மழைக்குத் தான் பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்கியவன்.பள்ளியைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக் கொண்டு நின்று விட்டேன்." என்று கூறும் இவரின் கதைக்களமும் கதை சொல்லும் முறையும் இலக்கியத்தில் தனித்த இடம் கொண்டவை. நாட்டுப்புற கதைக் களஞ்சியம் உருவாக்கியவர்.கி.ராவின் சிறுகதைகளில் காணலாகும் கரிசல் மக்களின் வாழ்வியல் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

கி.ராஜநாராயணன், கரிசல். நிலைநிறுத்தல் சிறுகதை, கதவு சிறுகதை, வேட்டி சிறுகதை

**முன்னுரை**

கரிசல் இலக்கியம் என்பது இலக்கிய வகைப்பாட்டில் மண் சார்ந்த பொருண்மையை குறிப்பிடுகிறது மண் சார்ந்த மக்கள் வாழ்வியல் குறித்தும் வாழ்வாதாரத்திற்காக நிலம் சார்ந்த அவர்களின் நீர், உணவு, வாழ்விட அமைப்பு போன்ற மண்ணோடு மக்கள் கொண்ட உறவைப் பற்றியும் விளக்குவதே கரிசல் இலக்கியத்தின் சாராம்சம் எனலாம். மண்ணையும் மனிதனையும் நேசிக்கிற எதார்த்தமான சிறுகதைகள் ஏராளமாய் வருகின்ற சூழலில் கரிசல் வட்டார சிறுகதைகள் கிராமிய சூழலையும் அங்கு வாழும் ஏழை எளியவர்களின் ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் அவர்கள் வாழ்வில் நிகழும் அவலங்களையும் நயமுடன் சித்தரிப்பதோடு ஒவ்வொரு கதையும் மனித உணர்வுகளையும் அவர்களின் வாழ்வியல் போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களின் வாழ்வியலைப் படம் பிடித்து காட்டும் நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.

**நிலைநிறுத்தல் சிறுகதை காட்டும் மக்களின் வாழ்வியல்**

கதை முழுவதும் மாசணத்தின் வறுமை வாழ்வும் மழை இல்லாமல் தவிக்கும் கரிசல் மக்களின் வாழ்வியல் துன்பங்களையும் அழகாக நம் மனதில் நிலைநிறுத்தல் என்ற சிறுகதை வாயிலாக நிலை நிறுத்தியுள்ளார் கி.ரா அவர்கள். புரட்டாசி முதல் பட்டத்தில் விதைக்க எல்லோருமே தயார். பருவ மழையைத் தான் காணோம். நடுப்பட்டத்திலும் பெய்யவில்லை.சம்சாரிகளின் நெற்றி சுருங்கியது. முகம் கடுக்க ஆரம்பித்தது. மழைக்கஞ்சி எடுத்தார்கள். கொடும்பாவி கட்டி இழுத்து ஒப்பு சொல்லி 'அழுதார்கள்'. கிராம தேவதைகளுக்கெல்லாம் கொடை நடத்தி, பலி கொடுத்து, அவைகளின் மனசை குளிர்வித்தார்கள். வேலைகள் ஸ்தம்பித்துப் போனதால் கூலிகள் பட்டினி கிடந்தார்கள். மாசாணத்தின் வீட்டில் ஐப்பசியின் அடை மழைக்காக கொஞ்சம் சேமித்து வைத்திருந்த தானியமும் தீர்ந்தது."இனி மண்ணை திங்க வேண்டியதுதான்" என்று சொன்னால் மாசாணத்தி.

பட்டினி ஊரோடு ஆரம்பமானது. ஓரளவு வசதியான வீடுகளில் மட்டும் அடுப்பு புகைந்தது. மாசாணம் இரண்டு நாள் பட்டினி இருந்தான். ராத்திரியில் தூக்கமே வரவில்லை. 'குத்துப்பட்டவன் தூங்கினாலும் குறை வைத்துக் காரணம்

தூங்க முடியுமா' மூணாவது நாள் மதியம் ஒரு முடிவோடு நேரே பார்வதி அம்மன் கோவில் முன் வந்து நின்றான். கைநீட்டிக் கூப்பி அதே நிலையில் ஒன்று இரண்டு நிமிடங்கள் கிடந்தான் ஊர்க்காரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். எழுந்திருந்த மாசாணம் தரையை கிள்ளி நெற்றியில் இட்டு சத்தம் போட்டு உரக்கச் சொன்னான். மழை பெய்கிற வரை இங்கேயே அம்மனுக்கு முன்னால் உட்கார்ந்து வயணம் காக்கப் போவதாகவும் மழை பெய்யாமல் போனால் பட்டினி இருந்து இங்கேயே உயிரை விடப் போவதாகவும் சொல்லி சப்பணம் போட்டு உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

மறுநாளும் மாசாணம் அதே நிலையில் இருந்தான் மூணாம் நாள் காலையில் மஞ்சள் வெயில் அடித்தது. அலசிவிட்டதை போல் வானம் சுத்த நீலமாய் இருந்தது."டொர்க் டொறக்"என்று ஒரு சொரித் தவளை சத்தம் கொடுத்தது. நெல்லிக்காய் அளவுள்ள கனமுள்ள குளிர்ந்த தூற்றல் முகத்தில் தலையில் கையில் விழ ஆரம்பித்தது. மாசாணம் கண்ணை திறந்து பார்த்தான் "ஈஸ்வரி..." என்று சொல்லிக்கொண்டே தனக்கு பக்கத்தில் உருண்டு வந்த ஒரு ஆலங்கட்டியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். ஆனந்தமாக எல்லோரும் நனைந்து கொண்டே கைத்தாங்கலாக நடத்திக் கொண்டு ஊர்வலம் போல் மாசாணம் வீட்டுக்குப் போனார்கள். சூடான பசும் பாலை சில்வர் டம்ளரில் விட்டு "இந்தா" மாசாணம், "குடி" என்று பிரியத்தோடு நீட்டினார் பெரிய முதலாளி. அதை வாங்கிக் கொண்டான். வாங்கிக் கொண்டு எல்லோருடைய முகத்தையும் பார்த்தான். மாசணத்தியின் முகத்தையும் தான். "போதும்" என்று சொன்ன போதும் "இன்னும் கொஞ்சம்" என்று பெரிய முதலாளி சொன்னதும் எல்லோரும் "இன்னுங்கொஞ்சம் இன்னுங்கொஞ்சம்".(கரிசல் கதைகள், பக்.208,209,210,211,212,213) என்று அவனை வற்புறுத்தினார்கள்.

**கதவு சிறுகதை காட்டும் மக்களின் வாழ்வியல்**

வானம் பார்த்த பூமி மானாவரி காடு என்று இயற்கை கட்டமைத்த வாழ்வியல் நில அமைப்பைக் கொண்டது கரிசல் நிலம். இவர்களின் அக வாழ்வியல் மனப்போராட்டம் சார்ந்தது. ஏனெனில் கரிசல் நிலம் இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட நிலம் என்று பா. ஜெயபிரகாசம் (2019) 'கரிசல் வெள்ளாமை' என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

கதவு என்னும் உயிரற்ற பொருள் கூட கி.ராவின் படைப்பு ஆளுமையால் உயிரோட்டம் பெறுகிறது. "கதை முழுவதும் லட்சுமி,சீனிவாசன் எனும் இரு சிறுவர்களின் வழி ஏழ்மை வாழ்வு சித்தரிக்கப்படுகிறது. கதவு அவர்கள் பயணம் செய்யும் பேருந்தாகிறது. வாழ்ந்துகெட்ட குடும்பத்தின் பணக்கார பழமையை காட்டும் கதவின் மீது சிறுவர்கள் விளையாடி மகிழ்கிறார்கள். கதவை தன் தோழனாகவும் நினைக்கிறார்கள். அவர்களுடைய அப்பா மணிமுத்தாறில் கூலி வேலை செய்கிறார்; அம்மா காட்டு வேலைக்கு சென்று விடுகிறாள்.

ஊர் தலையாரி வருகிறார். உங்கள் ஐயா எங்கே? என கேட்கிறான். குழந்தைகள் ஊருக்கு போய் இருப்பதைக் கூற, வந்தார் தீர்வை (வரி) கட்டச் சொல்லிவிட்டுப் போகிறார். மறுநாளும் வந்து கேட்கும்போது அம்மா அய்யா அவர்கள் ஊரில இல்ல மணிமுத்தாறு போய் அஞ்சு மாசம் ஆச்சு ஒரு தகவலையும் காணோம் மூணு வருசமா மழை தண்ணி இல்லையே நாங்க என்னத்த வச்சி உங்களுக்கு தீர்வை பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டுல போய் கூலி வேலை செய்து இந்த கொளந்தைகளை காப்பாத்துறதே பெரிய காரியம். உங்களுக்கு தெரியாதா? என்றாள்." (கி. ராஜநாராயணன் கதைகள், பக்.17). தீர்வை வரி கட்டாததால் தலையாரி ஆட்களைக் கொண்டு கதவை தூக்கிச் செல்கிறார். கதவு இல்லாததால் கைக்குழந்தையைத் தேள் கடித்து விடுகிறது. அதனால் குழந்தை இறந்து விடுகிறது. இரவில் கடும் குளிரில் நடுங்குகிறார்கள்; காய்ச்சி வைத்திருந்த கஞ்சியைக் கதவு இல்லாததால் நாய் குடித்து விடுகிறது. அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். தூக்கிச் செல்லப்பட்ட கதவு பள்ளிக்கு அருகில் உள்ள சாவடியில் உள்ளதை கண்டு பூரிக்கிறார்கள். கண்ணீர் வடிக்கின்றனர். அதை பலமாக பற்றிக் கொண்டிருந்தனர் என முடிக்கிறார். கதை முழுவதும் ஏழ்மை இழையோடுவதைக் காண முடிகிறது.

**வேட்டி சிறுகதை காட்டும் மக்களின் வாழ்வியல்**

மக்கள் மானம் காக்க ஆடை நெய்தவன் தன்மானம் காக்க முடியாமல் கிழிந்த வேட்டியை அணிந்து அவமானத்தால் பட்டினி கிடக்கும் அவல நிலையை வேட்டி சிறுகதை அழகாக எடுத்துச் சொல்கிறது. வறுமை காரணமாக ஒரே வேட்டியை துவைத்து துவைத்து உடுத்த வேண்டியுள்ளது. காற்றாட வெளியில் போக நினைத்தவருக்கு கலி புளியம்பழம்

உருவில் தொற்றிக் கொள்கிறது. அதைக் குனிந்து எடுக்க முயலும் போது வேட்டி ரெண்டாக ஒரு சாண் நீளத்திற்கு தைக்க முடியாதவாறு பிய்ந்துபோய்விடுகிறது.

1942 ஆகஸ்டு புரட்சியின் போது மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அரசு காவலர்கள் மூலம் அடக்குமுறை செய்தது. போராடுபவர்களை கொடுமைப்படுத்தியது. அந்த நேரத்தில் ஒரு அரசியல்வாதி தூங்கா நாயக்கரின் வீட்டில் ஒளிந்து கொள்ள போலீஸ் வந்து தூங்காநாயக்கரை அடித்து நச்சி எடுத்து விடுகின்றனர். பின்பு விட்டு விடுகிறார்கள். 'ஆகஸ்ட் வீரர்' எனும் பட்டத்தை நூலிழையில் தவற விட்டதால் சுதந்திர போராட்ட தியாகிகளுக்குக் கிடைக்கும் பென்ஷனும் கிடைக்காமல் போய்விடுகிறது. கிராமத்தில் ஒவ்வொரு பணக்காரர்களுக்கும் இருக்கும் வேட்டிகளையும் குழாய்களையும் நினைத்து தன்னுடைய வறுமை நிலைமைக்கு நொந்து கொள்கிறார். சுதந்திர தின வெள்ளி விழாவை கொண்டாடுவதற்கு நிதி வசூலிக்க தியாகிகள் வருகிறார்கள் தான் இருக்கும் நிலையில் தூங்காநாயக்கருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பரபரப்போடு எழுந்து நின்று இடது கையால் வேட்டியின் பிய்ந்த கிழிசலை மறைத்துக் கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானார். (மேலும் பக்.213,217,218) ஏழைகளின் வாழ்வு மட்டும் நைந்த வேட்டியைப் போல் எப்பொழுதும் கந்தலாகவே இருப்பதை இக்கதை உணர்த்துகிறது.

**முடிவுரை**

சமுதாயத்தில் நிலவும் அவலங்களை தன் எழுத்தாற்றல் மூலம் வெளிப்படுத்தி இருக்கும் கி.ராவின் திறன் பாராட்டுதற்குரியது. கரிசல் மக்களின் வாழ்வியலை கரிசனத்தோடு தன் கதைகளில் படம் பிடித்து காட்டியிருக்கும் கி.ராவின் எழுத்துத் திறமைக்கு நான் என்றென்றும் அடிமை.

துணைநூல்கள்

1. கி.ராஜநாராயணன், கரிசல் கதைகள், அன்னம் பதிப்பகம், ஜனவரி 2007

2.கி.ராஜநாராயணன் கதைகள், அகரம் பதிப்பகம், டிசம்பர் 2020

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.